***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***
***IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR***

| | | |
|---|---|---|
| CC | : | *33 /2025* |
| Deposition of Witness for | : | *PW. 4 (LW-2 )* |
| Name | : | குப்புசாமி |
| Father’s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

***Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 28th day of July 2026.***

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

விபத்தின்போது பேருந்தை ஓட்டிய நபர் ஆஜர் எதிரிதான். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடைபெற்ற நேரம் பகல் 11 மணி இருக்கும். என்ன தேதி என்று நினைவில்லை. விபத்துசம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் சாட்சியாக கையொப்பம் செய்த நபர் தெரியாது. நான் ஒரு பக்கம் உள்ள புகாரில் 2 கையொப்பங்கள் செய்தேன். காவல்நிலையத்தில் வைத்து புகாரை எழுதினேன். விபத்தில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களின் பதிவு எண் எனக்கு நினைவில்லை. பேருந்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் இருந்தார்கள். பேருந்து கரூரிலிருந்துகோவை நோக்கி சென்றுகொண்டிருந்தது. வேப்பம்பாளையம் பிரிவு சரவணா மெஸ் அருகில் விபத்து நடைபெற்றது.

நான் பேருந்திற்கு பின்னால் சென்று கொண்டிருந்தேன். 10 மீட்டர் இடைவெளியில் தொடர்ந்து சென்றேன். விபத்து ஏற்பட்ட பின்பு நான் அந்த இடத்திற்கு சென்று பார்த்தேன். தார் சாலையில்தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபர் எங்கள் ஊரை சேர்ந்தவர் எனக்கு உறவினர் இல்லை. நான் பேருந்திற்கு பின்னால் சென்று கொண்டிருந்ததால் விபத்து எவ்வாறு நடந்தது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பேருந்து இருசக்கர வாகனத்தில் மோதியதை நான் பார்த்திருக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற பிறகு காயம்பட்டவர் எனது ஊர்காரர் என்பதால் ஆஜர் எதிரிதான் என்று முடிவுக்கு வந்தேன் என்றால் சரியல்ல.

அந்த வழக்கு விபத்து சம்பந்தமாக காப்பீடு தொகை கோரி வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. இரு சக்கர வாகனத்தில் சுப்பிரமணி மற்றும் ஒரு நபர் மட்டும்தான் சென்றார்கள். ஓட்டுநருக்கு வில்லை வழங்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில், விபத்து நடைபெறவில்லை என்றாலும், நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. மனுதாரருக்கு நான்தான் விபத்து சம்பந்தமாக தகவல்கொடுத்தேன். மனுதாரர் குடும்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அவருக்கு ஆதரவாக பார்க்காத விபத்தை பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை பார்க்காமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்<br>கரூர் |

***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR***

| | | |
|---|---|---|
| CC | : | *33/ 2025* |
| Deposition of Witness for | : | *PW. 5 (LW-18)* |
| Name | : | திரு.சதீஷ்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

*Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 28th day of July 2026.*

**முதல் விசாரணை:**

நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகின்றேன். கடந்த 04.06.2024-ம் தேதி நான் கரூர் நகர காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது திருமதி.நவலட்சுமி, க/பெ.சுப்பிரமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நி.கு.எண்.382/2024 ச/பி.279, 337, 304 ஏ இ.த,ச படி வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்கு ஆய்வாளர் பா'ாவைக்கு வைத்தேன். ஆய்வாளர் விசாரித்தால். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் முதல் தகவல்அறிக்கை பெறப்பட்டது எழுத்து மூலமான புகாரில்தான் என்றால் சரிதான். இறந்துபோனவரின் மனைவி நவலட்சுமி என்பவர் புகார் கொடுத்தார். சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்<br>கரூர் |